பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை குறித்த காலத்தில் நடைபெறும்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் சமயத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுமாயின் அப் பரீட்சையை இரண்டு கட்டமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். எனவே தேர்தலைக்கருத்தில் கொண்டு பரீட்சை முழுவதையும் ஒத்திப்போடுவதோ அல்லது குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னர் நடத்தும் நோக்கமோ பரீட்சைத் திணைக்களததிற்கு கிடையாது என்றும் குறிப்பிட்ட நாட்களில் பரீட்சை நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் தினததிற்கும் ஒரு சில தினங்களுக்கு முன்னர் தொடக்கம் தேர்தல் முடிவுகள் வெளிவரும் வரையான காலப் பகுதியில் (6ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 11 25-06-94 சனிக்கிழமை ஓசை 127

# நள்ளிரவில் பாராளுமன்றம் கலைப்பு

# ஆகஸ்ட் 16இல் பொதுத் தேர்தல்

## ஜனாதிபதிச் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்படுவதாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பிரகடனப்படுத்தியுள்ளார். இப்பிரகடனத்தில் மேலும் ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம் நேற்று இதனை உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்துள்ளது. குறிப்பிட்ட காலத்திற்கு ஆறு மாதங்கள் முன்பாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி பதவிக்கான தேர்தல்கள் வரும் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெறக் கூடும்-

1989 பெப்ரவரி மாதத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறிலங்காப் பாராளுமன்றம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம்வரைசெயற்படக் கூடியதாக இருந்தபோதும் முன்னதாக கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்த உத்தரவிடப் பட்டுள்ளது- தேர்தலுக்கான நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன-

### ஜூலை 4 முதல் 16 வரை வேட்பு மனுக்கள் ஏற்பு

பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஜூலை நான்காம் திகதி முதல் பதினோராம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் பொதுத் தேர்தல் ஆகஸ்ட் 16-ம் திகதியன்று நடாத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுளது.

இவ் அறிவித்தலை நேற்று ஜனாதிபதி செயலகம் உத்தியோக பூர்வமாக வெளியிட்டது.

### அடுத்த எட்டு வாரங்களும் பரபரப்பானதாக இருக்கும்

(கொழும்பு)

அடுத்த எட்டு வாரங்களும் சிறிலங்கா அரசியலில் பரபரப்பு மிகுந்த வாரங்களாக இருக்கும் என்று பி. பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சிகள் தமது வேட்பாளர்களை தெரிவு செய்வது, நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வது, தேர்தல் பரப்புரைகளை விடு

### வரும் பாராளுமன்ற தேர்தலில்

## ஆதரவாளர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் கடந்த 17-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த க.ராஜு மட்டக்களப்புஎனும் ஆதரவாளருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கொழும்பில் சயனைட் அருந்தி இளைஞர் ஒருவர் மரணம்

### 300 கலோ வெடிமருந்து கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் வாகனங்களை வழி மறித்து சோதனையிட்டுக் கொண்டிருந்த பொலிசார் வாகனமொன்றை மறித்த போது அதிலிருந்த ஒருவர் சயனைட் அருந்தி மரணமானார். இவர் சயனைட் உட்கொண்ட நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோதும் அங்கு அவர் மரணமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து தெகிவளைப்பகுதியில் வீடொன்றை சோதனையிட்டபோது அங்கிருந்து 300 கிலோ வெடிமருந்து உட்பட பல வெடிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுளது.

இங்கு இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பி அனுப்பிய இளைஞர் விசாரணை சுவிஸ்சர்லாந்து தூதரகம் கண்டனம்

(கொழும்பு)

சுவிஸ்சர்லாந்திலிருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பட்ட இலங்கை அகதிகளில் ஒருவரை கட்டுநாயக்கா விமான

தூதரகம் கண்டித்துள்ளது.

கடந்த 4 வருடங்களாக சுவிஸில் தங்கியிருந்து விட்டு அகதிகள் அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட காரணத்தினால்

அதிகாலை 5 மணிமுதல் மாலைவரை தடுத்து வைக்கப்பட்டு இரகசியப் பொலிசாரால் விசாரிக்கப்பட்டார்.

# வரும் பாராளுமன்ற தேர்தலில் 24 இலட்சம் புதிய வாக்காளர்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் 24 லட்சம் புதிய வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவிததுள்ளார்.

சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளது தெரிந்ததே. இதன் போது இப் புதிய வாக்காளர் உட்பட மொத்தம் ஒரு கோடியே 18 இலட்சத்து 22 ஆயிரத்து 142 பேர் வாக்களிக்கவுள்ளனர் என தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கட்சிதாவிய ஆறுபேருக்கும் தொகுதி அமைப்பாளர் பதவி

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியில் இருந்து ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்த ஆறு பாராளுமன்ற உறுப்பனர்களுக்கும் அவர்களின் முன்னைய தேர்தல் தொகுதியிலேயே அமைப்பாளர் பதவி வழங்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துளளார்.

அவர்களுக்கு கட்சி அங்கத்துவம் வழங்கப்பட்ட பின்னர் அவர்கள மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே பொதுச் செயலாளர் மேற் கூறியவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் உங்கள் திறமைகளையும் உங்கள் செல்வாக்கினையும் எதிர்கால தேர்தல் வெற்றி மூலம் நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# காமினி - ஜனாதிபதி சந்திப்பு ரணிலின் முயற்சி தோல்வி?

(கொழும்பு)

பாராளு மன்றத்தின் நேற்றைய கூட்டத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், காமினிதிசாநாயக்காவும் காணப்பட விலை என்றும் இவர்கள் இராஜதந்திர ரீதியிலான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

காபந்து அமைச்சரவையின் தலைமை காமினி திசாநாயக்காவுக்கு வழங்கப்படலாம் என்று வெளிவந்துள்ள செய்தியைத் தொடர்ந்து இவ்வாறு ரணில் விக்கிரமசிங்காவும், சாமினி திசாநாயக்காவும் இராஜதந்திர பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை காமினி திசாநாயக்கா நேற்று ஜனாதிபதி மாளிகையில் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தி இரு பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இருந்தபோதும் பேச்சு விபரங்களை வெளியிட செயலக வட்டாரங்கள் மறுத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை ரணில் விக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காபந்து அமைச்சரவைக்கு புதியவர்கள் தேவையில்லை

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தற்போது உள்ள அமைச்சரவையே காபந்து அமைச்சரவையாக இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டாக ஜனாதிபதியிடம வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று நள்ளிரவு பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற தகவலை அடுத்து இவ்வாறு சகல எதிர்க்கட்சித் தலைவர்களும் கூட்டாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பிய மனுவொன்றில் மேற்படி விடயத்தை வலியுறுத்தித் தெரிவித்துள்ளனர்.

செய்வது, நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வது, தேர்தல் பரப்புரைகளை விடுப்பது எனப பலவாறாக அரசியல் நடவடிக்கைகள் சுறுசுறுப்படையும். இத்தேர்தலில் கடுமையான போட்டி நிலவும் எனவும், திடீர்ப் பொதுத் தேர்தலாக இருப்பதால்இதுஆளும்ஐ தே கவிற்கு சாதகமாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. திடீர்ப் பொதுத் தேர்தலாக இருப்பதால் தூங்கியிருக்கும் எதிரிகளை சுலபத்தில் வெல்ல முடியும் எனபது ஐ. தே கவின் கணிப்பாகும். எனினும் பொதுமக்கள் முன்னணியும் வெற்றியில் மிகுந்த நம்பிக்கை கொண்டுளளது.

# இன்று தபால் விநியோகம்

(வடமராட்சி)

'கோமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் அனைத்தும் தபால் திணைக்கள உத்தியோகத்தர்களால் கப்பலில் இருந்து நேற்று இறக்கப்பட்டன. இன்று முதல் தபால் விநியோகம் செய்யப்படும். (யோ)

# விண்ணப்பம் பார்வையிடலாம்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - 1994 டிசெம்பர் மாதிரி விண்ணப்பப் படிவம் வெளிவந்துள்ளது. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இம் மாதிரி விண்ணப்பப் படிவத்தினை ஈழநாதம் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவிததுள்ளனர்.

ங்கைக்கு திருப்பியனுப்பப்பட்ட இலங்கை அகதிகளில் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இரகசியப் பொலிசார் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட சம்பவத்தை இலங்கையில் உள்ள சுவிஸ் சுவிஸில் தங்கியிருந்து விட்டு அகதிகள் அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் திருப்பியனுப்பப்பட்ட இவ் அகதிகள் கொழும்பு வந்திறங்கிய போது இவர்களில் 24 வயது இளைஞர் ஒருவர் கைப்பட்டு இரகசியப் பொலிசாரால் விசாரிக்கப்பட்டார்.

இவர் மாலை 4.30 மணிக்கு, இவரை அழைத்துச் செல்ல சென்ற செஞ்சிலுவை சங்கத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

# ஜனாதிபதி வேட்பாளராக விவசாயியை நிறுத்த முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது ஒரு விவசாயியை தேர்தலில் போட்டியிட செய்ய வேண்டும் என மகாவலி 'சீ' பிரிவு சுதந்திர ஐக்கிய விவசாயிகள கழகம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக இவ் விவசாயிகள் கழகம் பல செல்வாக்கு மிகுந்த விவசாயிகளை தெரிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கை பண்டைய காலத்தில் ஒரு விவசாய நாடு என்றும் ஆனால் இன்று விவசாயிகள் தமது விவசாய கடன்களைத் தாக்கு பிடிக்க முடியாது தற்கொலை செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளசாகவும் எனவே ஜனாதிபதி தேர்தலில் ஒரு விவசாயி போட்டியிடுவது தவிர்க்க முடியாத நிகழ்வு எனவும் அக் கழகம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு விவசாயினாலேயே முடியும் என்றும் எனவே எதிர்காலத்தில் இந்த நாடு உணவில் தன்னிறைவை அடையவேண்டுமாயின் தமது கழகத்தை நாட்டு மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் எனவும் அக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# 'ராக்கிங்' செய்பவர் மீது கடும் நடவடிக்கை

## பல்கலைக்கழக துணைவேந்தர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக புகுமுக மாணவர்களை ''ராக்கிங்'' என்ற பெயரில் துன்புறுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தெரிவித்தார்-

புதிய கல்வி ஆண்டுக்கு அனுமதி பெற்றிருக்கும் இம் மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் ராக்கிங் செய்து வருவதாக எமக்கு பல முறைப்பாடுகள் ஏற்கனவே வந்துள்ளன- இம் முறைப்பாடுகள் சம்பந்தமாக நாம் விசாரணைகளை நடத்தி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்-

''ராக்கிங்'' செய்வது கண்டுபிடிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா கடற்படைக்கு எதிராக தமிழக மீனவர்கள் போர்க்கொடி

## விஜேதுங்காவின் கொடும்பாவி எரிக்க முடிவு

(சென்னை)

தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவதை நிரந்தரமாகத் தடுக்கவும், கச்சதீவுப் பகுதியை இந்தியா மீளப் பெற வேண்டுமென வலியுறுத்தியும் பல சட்டப் போராட்டங்களை தொடர்ந்தும் நடத்தப்போவதாக தமிழக மீனவர் முன்னணி என்ற அமைப்பு அறிவித்துள்ளது.

அத்துடன் மத்திய அரசு இது விடயத்தில் மௌனமாக இருக்குமெனின் தமிழகத்தின் கரையோர மாவட்டங்களில் மறியல் போராட்டம் நடத்தப்படும் எனவும், சிறிலங்கா ஜனாதிபதி டி., பி- விஜேதுங்காவின் கொடும்பாவி எரிக்கப் படும் எனவும் அவ் அமைப்பு மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளது-

சாலைகளில் கட்டுமரங்களைப் போட்டு வலைகளைக் கட்டி மறியல் செய்யப்படும் என்றும், இறுதிக் கட்டமாக சென்னைத் துறைமுகம் உட்பட தமிழ்நாட்டிலுள்ளதுறைமுகங்கள் அனைத்தும் மீனவர்களின் விசைப்படகுகளால் முற்றுகையிடப்படும் எனவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### SLEAS

அதிபர், SLEAS பரீட்சைகளுக்குரிய நுண்ணறிவு, கிரகித்தல், பொதுவிவேகப் பயிற்சிகள், ஆய்ந்தறிதல் திறன், கிரகித்தல் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. -கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (8617)

### விற்பனைக்கு

மேற்பாகம் கண்ணாடிக் கதவுகள், கீழ்ப்பாகம் பலகைக்கதவுகள் உடைய 8அடி, 9அடி நீளமுள்ள சோக்கேஸ் அலுமாரிகள் விற்பனைக்குண்டு. கடைப் பாவனைக்கு உகந்தவை. தொடர்பு:- நாதன் ஸ்ரோர்ஸ், மருதடி, பருத்தித்துறை. (8645)

### காவேரி சீயாக்காய்ப்பவுடர்

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனமாகிய 6 வகை இயற்கைப் பொருட்களை அளவுப் பிரமாணத்தின்படி தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றது. சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப்பவுடர் என்று சேட்டு வாங்கவும். (8598)

### நினைவுகள் அழிவதில்லை

பாட்டாளி மக்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட கையூர் தியாகிகளின் வீரக்கதை. விற்பனையாகிறது - வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில். (8568)

### விற்பனைக்கு

கடைப்பாவனைக்குரிய சோக்கேஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு:- நொதேண்சார் ஜெஸ், 54மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி அருகாமை யாழ்ப்பாணம். (8647)

### இறைச்சிக்கோழி

புறொயிலர், இறைச்சிக் கோழி கிலோ 150/- சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம்

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

உடற் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 ஜூலை 21 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

### சம்பள அளவுத் திட்டம்:

ரூபா 7,950- 10 X 250 - 10,450/- (மாதமொன்றுக்கு)

### தகைமைகள்

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் உடல்கல்விப்பட்டம் அல்லது அதற்குச் சமனான அல்லது உயர்ந்த தகைமைகளுடன் அப்பட்டங்களைப் பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதில் 12 ஆண்டு அனுபவம்:

அல்லது

ஆ) அனுமதிக்கப்பட்ட பட்டப்பின் அல்லது உயர் தொழிற் தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் அட்பட்டங்களைப் பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு படுத்தி, செயற்படுத்துவதில் 15 ஆண்டு அனுபவம்

### வயது:

45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

### தெரிவு:

நேர்முகப் பரீட்சை மூலம்

மற்குறிப்பிட்ட சம்பளத்துடன் 1994 டிசெம்பர் 31ஆம் தேதி வரை சம்பளத்தின்25 சதவீதம் செலுத்தப்படும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 564ஆம் இலக்க 1993-03-15 ஆம் தேதிய சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 600/- ரூபா மாதாந்தப் படியாகச் செலுத்தப்படும்

9/93 ஆம் இலக்க 1993.05.12 ஆம் தேதிய பொது நிருவாக சுற்று நிருபத்தின்ஏற்பாடுகளுக்கு இணங்க 600/ ரூபா மாதாந்தப் படியாகச் செலுத்தப்படும்.

இப்பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கியில் அல்லது சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின்சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பித்தல்வேண்டும்

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர் 23X10 ச.மீ அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்சழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியானகாசுக் கட்டளை/தபாற்கட்டளையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பட்டபடிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்கள, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்டசபையைச்சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம்விண்ணப்பித்தல் வேண்டும்அரசாங்க சேவையிலிருந்து ஒய்வு பெற்றவர்கள் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு விண்ணப்பிக்கலாம். அவ் விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 70 ஆகும். ஓய்வு பெற்ற ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் ஓய்வு பெறும் போது கடைசியாகப் பெற்ற சம்பளம் செலுத் தப்படும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994.06.21

(சி-9876)

---

## போட்டி

கல்வித் திணைக்களம் வலயம் இரண்டு மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இப் போட்டி நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்து கொள்கின்றனர்.

## மருந்துகள் வந்தன

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு மருந்து வகைகள் நேற்று பருத்தித்துறைக்கு வந்த 'பிளெம்பயோன்' கப்பல் மூலமாக எடுத்து வரப்பட்டன.

ஊசிமருந்துகள், மருந்து வகைகள், காஸ் சிலிண்டர்கள் என்பனவும் வந்தன. இவை உடனேயே அத் திணைக்கள அதிகாரிகளினால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (யோ)

## நினைவுப் பேருரையும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

பண்டிதமணி நினைவுக் காப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் பண்டிதமணி நினைவுப் பேருரை வழங்கலும், பண்டிதமணி நினைவு விருது வழங்கலும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் திருக்கேதீச்சர மான்மியம் என்னும் நூலை எழுதியமைக்காக பண்டிதர் மு. கந்தையா விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

''தமிழிலக்கியத்தில் இரண்டாவது பக்தியுகம்'' என்னும் பொருள்பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி பண்டிதமணி நினைவுப் பேருரை நிகழ்த்த இருக்கின்றார்.

பண்டிதமணி நினைவுக் காப்பு நிதியம் கடந்த ஆண்டில் மெய்கண்டாருக்கு முற்பட்ட சைவசித்தாந்தம் என்னும் பொருளில் மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராசா நினைவுப் பேருரை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டம்

உதயன் கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகலில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் ஆட்டத்தில் காட்சிப் போட்டியாக உதயன் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி விளையாடும். மூன்றாம் இடத்திற்கான போட்டியில் வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணியும், இறுதியாட்டத்தில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழமும் விளையாடவுள்ளன.

## சிறுவர் நாடக விழா

பாடசாலைகளில் சிறுவர் நாடகத்துறைக்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் சிறுவர் நாடக விழாக்களை நடத்துவதற்கு முன் வந்துள்ளது. இச் சிறுவர் நாடக விழாக்கள் அடுத்த மாதம் 1, 2, 3, 4ம் திகதிகளில் முறையே மல்லாகம் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆகிய இடங்களில் நிகழவிருப்பதாகக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

இந் நாடக விழாக்களில் சிறுவர்கள் முற்றுமுழுதும் பங்கேற்று நடிக்கும் ஐந்து நாடகங்கள் மேடையேறவுள்ளன.

## இலக்கிய அரங்கு

(கொழும்புத்துறை)

அறவழி இலக்கிய பேரவையினர் நடத்தும் மாதாந்த இலக்கிய உரையரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை அறவழி பயிலகத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் உரையரங்கில் ''போராட்ட இலக்கியம்'' என்னும் தலைப்பில் திரு. கே. ஆர்.

---

## நினைவு கூருகின்றோம்... 25 06-1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - கரவெட்டியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த,

**ரமேஸ்-ரவி** (பாலசுப்பிரமணியம் செல்வராசா- கரணவாய் கிழக்கு, கரவெட்டி - யாழ்)

1986ஆம் ஆண்டு திருமலை - தம்பலகமம் பகுதிக் காட்டினில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட பெண் உட்பட 34 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விஜி** (பொன்னுத்துரை ஏகாம்பரம்- மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜாக்கி** (ஜெயசுந்தரம் கெங்காதரன் - சோடாக் கடையடி, மயிலியதனை-வல்வெட்டித்துறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு பின் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட புதுமுகத்துவாரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 85 தமிழர்கள்.

திருமலை - கவாட்டிக்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையில் கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1992ஆம் ஆண்டு பொலநறுவை - சிங்கபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அற்புதன்** (விபுலானந்தன் உதயகுமார் - மண்டூர்- மட்டு)

மட்டுநகரில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த.

**சசிக்குமார்** (துவராசா ரவிச்சந்திரன் - மகிழவெட்டுவான் - மட்டு)

யாழ் - கட்டைக்காட்டில் 23-6-92 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**புகழரசன்-மதன்** (பொன்னையா சுதர்சன் - கோப்பாய் வடக்கு - யாழ்)

1993ஆம் ஆண்டு மட்டு - வாகரை, தட்டுமுனையிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கலைமகன்** (தர்மலிங்கம் மோகன் - சந்தைவீதி, மட்டு)

மட்டு - அரசடித்தீவுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். விபுல்-திருநந்திதேவன்** (கோபாலப்பிள்ளை ரகுநாதன் - அரசடித்தீவு - மட்டு)

மட்டு - வாகரையில் ஏற்பட்ட சம்பவத்தின் போது கொல்லப்பட்ட கடற்றொழிலாளி ஒருவரும் தொண்டர் ஆசிரியர் ஒருவருமாக 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9875)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## இறைச்சிக்கோழி

புறொயிலர், இறைச்சிக் கோழி கிலோ 150/- சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்)

(8644)

---

## சக்தி இயற்கைப்பசளை

சக்தி இயற்கைப் பசளை கூட்டெரு முறையில் தயாரானது. மண்ணை வளம்படுத்திப் பயிருக்கு ஊட்டமளித்து விளைச்சலைப் பெருக்கும். சக்தி இயற்கைப் பசளை. கிலோ. ரூ. 10/-

''மில்க்வைற்''

(சி 9877)

---

## தவறிவிட்டது

கொக்குவில் அ. மி. த. க. (கே. கே. எஸ். வீதி), பாடசாலைக்கு முன்பாக மூக்குக் கண்ணாடி ஒன்று 22. 6. 94 புதன்கிழமை அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்திலோ அல்லது யாழ். இந்து மகளிர் கல்லூரி காரியாலயத்திலோ ஒப்படைக்குமாறு தயவுடன் வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் த. ச. யோகீஸ்வரன்

(சி-9879)

---

## கொள்ளை நோய்த் தடுப்பூசி

கோழிகளுக்கு ஏற்படும் கொள்ளை நோய்க்கெதிராக தடுப்பூசி மருந்துகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் சென்ற மாதம் தென்மராட்சிக் கோட்டச் செயலகத்தில் வைத்தும், கரம்பைக்குறிச்சி சனசமூக நிலையத்தில் வைத்தும் 1300க்கு மேற்பட்ட கோழிகளுக்கு இந்நோய் தடுப்பூசிகளை போட்டுள்ளனர்.

---

ஆணைக்குழுவின் 564ஆம் இலக்க 1993-03-15 ஆம் தேதிய சுற்று நிருபத்தின்

யாழ்ப்பாணம். 1994.06.21

(சி-9876)

---

## கணக்காய்வாளர் தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு ஒரு கணக்காய்வாளர் உடன் தேவை ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவமிக்கவர்கள் தகுந்த சான்றிதழ்களுடன் 27-06-94 திங்கட்கிழமை காலை 9—11 வரை நேடரில் வரவும் வயதெல்லை 25 முதல் 40 வரை.

அழகியல் உதிரிப்பாகமாடம்
71, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.

(8651)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
20-10-1975

தாய் மண்ணில்
25-06-1992

### வீரவேங்கை புகழரசன்
### (பொன்னையா சுதர்சன்)

பிறப்பதும் இறப்பதும் ஒருமுறை
பிறந்த பயனை பெற்றுக் கொண்டாய்
இறந்த பின்னும் உன்புகழ் நிலைக்க
பேர் கொண்டாய் புகழரசா!

கோப்பாய் வடக்கு. (8648) - குடும்பத்தினர்

---

ளது.

இவ் உரையரங்கில் ''போராட்ட இலக்கியம்'' என்னும் தலைப்பில் திரு. கே. ஆர். டேவிட் சொற்பொழி வாற்றுவார். (24)

## சங்கிலியன் மன்ற ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்ற 49வது ஆண்டு நிறைவுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிறைவுவிழாவைமுன்னிட்டுஅன்றையதினம்காலையில் விளையாட்டுப் போட்டிகளும் மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## சிறப்பு பொதுக் கூட்டம்

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின் சிறப்புப் பொதுக் கூட்டம் நாளை காலை ஒன்பது மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் உறுப்பினர், ஆர்வலர் அனைவரும் கலந்து கொள்ளும்படி மன்றத் தலைவர் கலாநிதி நா. சுப்பிரமணியன் அழைப்பு விடுத்துள்ளார்.

---

சிறுவர்கள் முற்றுமுழுதும் பங்கேற்று நடிக்கும் ஐந்து நாடகங்கள் மேடைபெறவுள்ளன.

## கற்பித்தல் உபகரண கண்காட்சி

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு இரண்டில் கற்பிக்கும் ஆசிரியர்களால் உருவாக்கப் பெற்ற உபகரணக் கண்காட்சி இம்மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்குத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் இரண்டின்கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி இக்கண்காட்சியைத் திறந்து வைப்பார். தேசிய கல்வி நிறுவனத்தின் ஆண்டு 2 புதிய பாடத்திட்டத்திற்கமைவாக உருவாக்கப் பெற்ற கற்பித்தல் உபகரணங்கள் இக்கண்காட்சியில் இடம் பெறுமென்றும், ஆசிரியர்கள் இக்கண்காட்சியை இலவசமாகப் பார்வையிடலாமெனவும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார்.

---

## அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக்கழகம் நடாத்தும் சுற்றுப் போட்டிகள்

1. மென்பந்து துடுப்பாட்டம் (7 பேர் 12 பந்து மாற்றங்கள்)
2. வலைப்பந்து

விண்ணப்பக்கட்டணம் ரூபா 50/-


10 - 07 - 94 -ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பக் கட்டணத்துடன் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
தலைவர் | செயலாளர்
களவத்துறை வி.க.
அராலி தெற்கு,

(8652) — செயலாளர்

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### அப்புத்துரை செல்லத்துரை அவர்கள்

(அதிபர், துணவி அ. மி. பாடசாலை)

தோற்றம்
09-10-1921

மறைவு
05-07-1993

அன்பினால் அரவணைத்து அறிவுரைகள் பலகூறி
பண்பிலே எமை உயர்த்தி பாசமுடன் எமை வளர்த்து
பாரினிலே தவிக்க விட்டு பறந்தோடிச் சென்றீரப்பா
உனையிழந்து நாமிங்கு உற்ற துயர் கொஞ்சமில்லை
ஓராண்டே சென்றாலும் நீங்காது உங்கள் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(8649)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சிறிசேன கூரேக்கு தேசிய அமைப்பாளர் பதவி

## வாக்கு சேகரிக்கும் கட்சியின் முயற்சி

(கொழும்பு)

வீடமைப்பு நிர்மாணதுறை அமைச்சரும் முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளருமான சிறிசேன கூரேக்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வழங்க கட்சி முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது கட்சி நடவடிக்கைகளை விட்டுவிலகி இருக்கும் இவரை கட்சியின் செயற்பாடுகளை ஒன்றிணைப்பதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இவரிடம் இருந்து பொது செயலாளர் பதவி பறிக்கப்பட்டதை தொடர்ந்து கட்சி நடவடிக்கைகளை இவர் தவிர்த்து வந்ததாகவும் இதற்காகவே இப்பதவி வழங்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

கொழும்பு மத்திய தொகுதியில் பெரியளவில் தனிப்பட்ட செல்வாக்கை பெற்றுள்ள இவரை கட்சியில் இணைத்துக் கொள்வதைத் தொடர்ந்து கணிசமான வாக்குகளை கட்சி பெற முடியும் என கருதப்படுவதினாலே மேற்படி பதவி வழங்கப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி விக்கிரம வீரசூரிய அமைச்சர் கூரேயுடன் சென்ற சில தினங்களாக சந்தித்து பல மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் தெரிய வருகின்றது.

# தேயிலை விலை வீழ்ச்சி ஆராய ஆணைக்குழு

(கொழும்பு)

முன்னெப்போதும் இல்லாத வகையில் தேயிலை விலை வீழ்ச்சி கண்டிருப்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனிநபர் ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

தேயிலை விலை வீழ்ச்சி தொடர்பான தனது அறிக்கையை ஆணைக் குழு மூன்று மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கும். உலக கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகள், குறைந்த உற்பத்தித்திறன், குறைந்தளவு செலவினதிறன், ஏற்றுமதியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையிலான நியாயமற்ற போட்டாபோட்டி, தரம் குறைந்த உயர்ரக தேயிலை போதியளவு உற்பத்தியின்மை, உற்பத்தி மற்றும் செயல் முறைகளில் குறைபாடுகள் ஆகியன பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

# பதுளை சு.க. எம்.பி ஐ.தே.கவில் இணைவார்

(கொழும்பு)

மேலும் பல சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.கவில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர் என ஐ.தே.க பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் பதுளை மாவட்ட எம்.பி எட்வின் விக்ரமரட்ண நாடு திரும்பியதும் ஐ.தே.கவில் சேருவார் எனவும் ஐ.தே.க பொதுச்செயலர் கூறினார்.

# யாகப்பர் ஆலய சேதம் அரச அதிபர் விபரம் கோரல்

(நல்லூர்)

யாழ் குருநகர் புனித யாகப்பர் ஆலய சேத மதிப்பீடுகளை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை அருட்திரு ஜெயச்சந்திரன் அடிகளாரை கேட்டுள்ளார்.

சிறிலங்காவின் சுப்பர்சொனிக் விமானக் குண்டு வீச்சினால் பாரியளவு சேதமடைந்... பொதுமக்கள்மூலம் நிதி திரட்டப்பட்டு வருகின்றது. யாழ் அரச அதிபர் இச்சேதம் பற்றி சிறிலங்காவின் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுடன் நேரில் தொடர்பு கொண்டதன் பயனாக இச்சேத மதிப்பீடுகளை தம்மிடம் சமர்ப்பிப்பின் ஜனாதிபதி நிதியில் இருந்து ஒரு தொகை சிறிலங்கா ஜனாதிபதியினால் வழங்கப்பட உள்ளதாகவும் யாழ் அரச அதிபர் தெரிவித்ததாக புனித...

## மாற்கு ஓவியக்காட்சி

இன்றும், நாளையும் ஓவியர் திரு அ. மாற்கு அவர்களின் 60ஆம் ஆண்டு பிறந்ததின நிறைவையொட்டி ஓவியக் கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது. இக் கண்காட்சி யாழ். சுனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஓவியக் கூடத்தில் இடம் பெறும்

## நாட்டுக்கூத்து முதலிடம்

கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தமிழ் திறன் போட்டியில் நாட்டுக் கூத்து 3ம் பிரிவில் 'காத்தவராயன்' நாட்டுக் கூத்தை மேடையேற்றி மாவட்டத்தில் முதலிடத்தை யாழ். புனித மரியாள் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

இவர்கள் கோட்டரீதியிலும் வலயரீதியிலும் முதலிடம் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒழுங்கமைப்பு கலந்துரையாடல்

யாழ் உள்ளூராட்சி திணைக்களம்எதிர்வரும் ஆகஸ்ட்,செப்டம்பர் மாதங்களில் நடத்தவுள்ள ஈழத்து நூல்,சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படக் கண்காட்சி தொடர்பான ஒழுங்கமைப்பு செய்வது பற்றிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 10 மணிக்கு மேற்படி திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

## நிர்வாகிகள் தெரிவு

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்திற்கு 15 பேர்...

## உடை தயாரிப்பு பயிற்சி நெறி

(பருத்தித்துறை)

யாழ். கல்வித்திணைக்கள (வலயம் 2) முறைசாராக் கல்விப் பிரிவு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் பாடசாலையை விட்டு விலகிய யுவதிகளுக்கான "உடை தயாரித்தல்" பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது. இவ் உடை தயாரித்தல் பயிற்சி நெறியில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் யுவதிகள் கல்லூரிஅலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாமென கல்லூரி அதிபர் திருமதி இ. நந்தகுமார் அறிவித்துள்ளார்

(25)

## விளையாட்டு விழா

பெரியபுலம் மகா வித்தியாலய வேலணை சரஸ்வதிவித்தியாலய விளையாட்டு விழா இன்று சனி பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

# சீதனக் கொடுமை நீடிப்பின் எதிர்கால சந்ததி தூற்றும்

## சீதன ஒழிப்பு கருத்தரங்கில் உரை

(வடமராட்சி)

"சீதனம்பெண்ணை விலை பேசுகின்ற பொருளாக மாறி விட்டது. சீதனம் பெண்ணுக்கு பாதுகாப்பற்றது. எமது மண்ணில் சீதனக்கொடுமை நிலைக்க நாம் அனுமதிக்க முடியாது. அனுமதிப்போமேயானால் எங்களை எதிர்காலச்சந்ததி தூற்றும்."

இவ்வாறு புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் மகளிர் அரசியற் துறையைச் சேர்ந்த செல்வி லோகா தலைமையில் நடைபெற்ற சீதன ஒழிப்புப் பிரசாரக் கருத்தரங்கில் வடமராட்சிக் கோட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி மலையரசி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது, "எமது மண்ணில் சீதனக் கொடுமையை நிலைக்க விடாமல் தடுக்கும் நடவடிக்கையில் நாங்கள் கிராமரீதியாக மக்கள் அபிப்பிராயங்களையும் ஆதரவுகளையும் அறியும் நோக்கில் பிரசாரக் கருத்தரங்குகளை நடாத்தி வருகிறோம்.

இன்று இந்தச் சீதனக் கொடுமையினால் எத்தனையோ பெண்கள் தற்கொலை செய்துள்ளனர். எமது சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுகின்றனர் சீதனக் கொடுமையினால் பெண்ணினம் மட்டுமல்ல ஆண்களும் பாதிக்கப்படுகின்றனர். பல பெண்களுடன் பிறந்த ஒரு ஆண் தனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்க சீதன வசதி இல்லாததினால் அச் சகோதரிகளுக்காக தன்னை அர்ப்பணித்து தனது இல்லற வாழ்வை வெறுக்கின்ற நிலை காணப்படுகின்றது. அந்த ஆணுக்குள்ள ஆசைகள், அபிலாஷைகள் நரைத்துப் போகின்றன.

சீதனக்கொடுமையினால்எத்தனையோ பெண்கள் திருமணவாழ்வு இல்லாமல் வயது போன நிலையில் இன்னமும் முடங்கிக் கிடக்கின்றனர். பெண்ணினம் தமிழீழப் போராட்டத்தில் திறமை கொண்டுள்ளது, பெருமை கொண்டுள்ளது. எமது இனம் அச்சமில்லாமல் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக பெண்ணினம் போராடிக்கொண்டிருக்கிறது. எமது தலைவர் வழியில் நாம் அணிதிரண்டிருக்கிறோம். எமது மண்ணில் பாகுபாடுகளை, சீதனக் கொடுமைகள் இல்லாமல் செய்ய மக்களாகிய நீங்களே உதவ முன்வரவேண்டும் பெண் பிள்ளைகளை பெற்ற பெற்றோர் பட்டினி இருந்து தமது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டிய நிலை உள்ளது.

எமது தேசம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழுகின்ற ஒரு நிலை உருவாகும் போது இப்படியான சீதனக் கொடுமைகளினால் ஏற்படும் களங்க நிலை அழிய வேண்டும். சீதனத்தினால் எமது சமுதாயம் பாதிக்கப்படுகின்றது. இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. சீதனத்தை நாம் தடை செய்ய முன் வந்துள்ளோம். அதே நேரம் மக்களின் ஆதரவுகளையும், அபிப்பிராயத்தையும் அறிந்து கொள்ளவும் விரும்புகிறோம். தன்னிச்சையாக நாம் இதனை தடைசெய்ய விரும்பாமல் உங்களின் ஒத்துழைப்பையும் நாடுகிறோம். இதற்காகவே இக்கருத்தரங்குகளை நடாத்தி வருகிறோம்" என்றார்.

மக்கள் மத்தியில் அபிப்பிராயங்களும் கேட்டறியப்பட்டன. சீதனக்கொடுமை பற்றிய வீடியோ படக்காட்சி, தெருக்கூத்து என்பனவும் இடம் பெற்றன. (யோ

# வானியல் ஆய்வு பாசறை அச்சுவேலி ம.வி. நடத்தியது

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் விஞ்ஞானக் கழகத்தினர் தமது கல்விக்கள ஆய்வு நெறியின் முதற் கட்டமாக வானியல் உடுத்தொகுதி ஆய்வு இரவுப்பாசறையினை நடாத்தியுள்ளனர்.

கடந்த பதினைந்தாம் திகதி இரவு அச்சுவேலி உலவிக்குலம் பிள்ளையார் கோவில் வெளியில் இப்பாசறை மகாவித்தியாலய அதிபர் க. இராசதுரை அவர்களால்ஆரம்பித்து வைக்கப்பட்டது. விஞ்ஞான கழகத் தலைவர் ஆசிரியர் திருமதி கு. பமநரு அவர்களின் தலைமையில் விஞ்ஞான ஆசிரியர்களும், நாற்றுக்கணக்கான எட்டாம் ஆண்டு மாணவர்களும் கலந்து கொண்ட இக்கள ஆய்வுக்கற்றல் நெறி தொடர்ச்சியாக ஒன்பதாம், பத்தாம் ஆண்டு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது

விஞ்ஞானக் கல்வியை முழுவதும் செயல் முறை சார்ந்ததாகமாற்றியமைக்கும்திட்டத்தின் முதல் நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்படுகிறது.

இவற்றைத் தொடர்ந்து உயர்வகுப்பு மாணவர்களுக்கான விடுமுறைக்கால கடல்வள உயிரியல் கள ஆய்வு, வறள் நிலத்தாவரவியல் கள ஆய்வுகளும் அவ்வவ் இடங்களில் வதிவிடக்கள ஆய்வாகச் செய்வதற்கான திட்டமும் இத்தவணைஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

# பிரபாகரன் பதிலை எதிர்பாராது அரசு தன் பதிலை கூறவேண்டும்

## அமைச்சர் றொனிக்கு ஹிஸ்புல்லா பதில்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தொண்டமானும், அஷ்ரப்பும் இணைந்து தயாரித்த திட்டம் தொடர்பாக பிரபாகரனின் பதில் ஏதும் கிடைக்கவில்லை. பிரபாகரனின் பதிலை தெரியாது அரசு எதுவும் செய்ய முடி... ...ப்பினர் ஹிஸ்புல்லா பிரபாகரனின் பதிலை பார்த்திராது இதற்கான அரசின் நிலை என்ன என்பதை அறிவிக்க வேண்டும் என்றார். இது குறித்து பிரபாகரனுடன் அமைச்சர் தொண்டமான் பேச ஏன் அனுமதிக்கக்கூடாது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அஷ்ரப் தீர்வுத் திட்டத்தில் இணைந்த வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது அவசியமாகும் என்றார் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு மறுத்து வந்தால் அது போரை நீடிக்க விரும்புகின்றது என்பது அர்த்தமாகும்.

அண்மையில் வாழைச்சே... ...மான பொலிஸ் அதிகாரி அங்கிருந்து இடமாற்றப்பட்டு மீண்டும் முஸ்லிம் பகுதி ஒன்றுக்கே நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் மட்டக்களப்பு வந்த ஐ. தே. க பொதுச் செயலர் ஐ. தே. க. ஆதரவாளர்க்கே வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றார். இதுதான் ஜனநாய...

னால் பாரியளவு சேதமடைந்துள்ள புனித யாகப்பர் ஆலயத்தை திருத்தியமைக்கும் முயற்சியில் யாகப்பர் ஆலய புனர்நிர்மாணக் குழுவின் மூலம் அதிபர் தெரிவித்ததாக புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (17)

யினார் ஆலயத்திற்கு 15 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாட்டை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர்மேற்கொண்டிருந்தார்.

அரசு எதுவும் செய்ய முடியாது என துறைமுக கப்பல் துறை அமைச்சர் றொனிடிமெல் பாராளுமன்றத்தில் கூறினார்.

இதற்கு அப்போது குறுக்கிட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறு

எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் தொண்டா-

தமாகும்.

அண்மையில் வாழைச்சேனையில் முஸ்லிம்கள் மீதான துப்பாக்கிச் சூட்டிற்கு காரண

வாய்ப்பு வழங்கப்படும் என்றார். இதுதான் ஜனநாயகமா? என்றும் ஹிபுல்லா கேள்வி எழுப்பினார்.

## பொது ஜன ஐக்கிய முன்னணியின்

# தலைமை வேட்பாளராக அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

மிக விரைவில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலின் போது தற்போதைய தென்மாகாணசபை முதல் அமைச்சர் அமரசிறி தொடங்கொட பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளராக போட்டியிட இருப்பதாக தெரிய வருகின்றது.

இதனைத் தொடர்ந்து ஏற்படும் மாகாணசபை வெற்றிடத்திற்கு பீ. வை. துடாவை நியமனம் செய்யப்படுவார் எனவும் இதற்கு சில உறுப்பினர் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறப்படுகின்றது.

## தோட்டப்பாடசாலைகளில் கடமையாற்றிய

# ஓய்வுபெற்ற ஆசிரியர்க்கு ஓய்வூதிய உரித்து வழங்கல்

அரசால் பொறுப்பேற்கப்பட்ட தோட்டப்பாடசாலைகளில் கடமை புரிந்த ஆசிரியர்களின் சேவைக் காலம் ஓய்வூதியத்திற்கு கணிக்கப்படவிருப்பதால் 31. 01. 1994 வரை இளைப்பாறி, ஓய்வூதியத்திற்குத் தோட்டப் பாடசாலைச்சேவையில் சேர்த்துக் கொள்ளப்படாதவர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தைக் கல்வித்திணைக்களம் வலயம் -1ல் பெற்று பூரணப்படுத்தித் தருதல் வேண்டும். இதற்கான நேர்முகப்பரீட்சை பற்றி உரிய காலத்தில் அறிவிக்கப்பட்டு நேர்முகபரீட்சை நடாத்தப்படும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இது தொடர்பாக விண்ணப்பப்படிவங்களை நிரப்பிக் கையளித்து இது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் அளித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. 01. 01. 1985 தொடக்கம் 31. 08. 1990 வரையான காலத்தில் இளைப்பாறியவர்களின் ஓய்வூதியம், வயது அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டமையால் அவர்களும் விண்ணப்பிக்கத்தேவையில்லை.

தோட்டப்பாடசாலைகளில் சேவை செய்து தொடர்ந்து யாழ். கல்வித்திணைக்களம் வலயம் 1 இற்குட்பட்ட பாடசாலையில் சேவையாற்றிக்கொண்டு இருப்பவர்கள் தங்கள் தோட்டப் பாடசாலைச் சேவையை ஓய்வூதியத்திற்குச் சேர்ப்பதற்காக விண்ணப்பப்படிவங்களைக் கல்வித்திணைக்களம் வலயம் 1-ல் பெற்று பூரணப்படுத்தித் தருதல் வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் மாடுகளுக்கு இலக்கமிடப்படுகிறது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு இலக்கமிடும் புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பூநகரி, முழங்காவில் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாடுகளை அடையாளம் காணவும் பதிவேடுகளைப் பேணவும், பராமரிக்கவும், களவுகளைத் தடுக்கவும், கட்டாக்காலிகளை அடையாளம் காணவும் முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

---

## விபத்தில் காயம்

கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் யாழ். ஆரியகுளம் சந்தியில் சைக்கிளில் வந்தவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் வந்த முத்துசாமி லட்சுமணன் (வயது51) படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட லட்சுமணன் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (21)

# இ. தொ. கா. தேசியசபை விரைவில்கூட்டநடவடிக்கை

## ஐ. தே. க. உறவு குறித்தும் ஆராயப்படும்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு எடுக்க அதன் உயர்மட்டமானதேசிய சபை விரைவில் கூடஇருக்கின்றது. தேசியசபை கூட்டுவது குறித்து எதிர்வரும் 2-ம் திகதி அமைச்சர் தொண்டமான் தலைமையில் கூடும் செயற்குழு கூட்டம் முடிவெடுக்கவுள்ளது.

கடந்த ஜனவரியில்இ.தொ.கா தேசிய சபை இறுதியாக கூடியிருந்ததுநடைபெறவுள்ள தேசிய சபை கூட்டத்தில் இ. தொ. கா - ஐ. தே. க உறவு குறித்து கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 6 சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இராஜினாமா கடிதங்கள் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது ஐ. தே. கவில் இணைந்து விட்ட 6 சுதந்திரக்கட்சி எம், பிகள் தமது இராஜினமா கடிதங்களை சமர்ப்பித்தனர். தமது பிரியாவிடை உரைகளையும் அவர்கள் நிகழ்த்தினர்.

சுதந்திரக் கட்சிக்கு இந்த ஆறுபேரும் ஒத்துழைப்பு தரவில்லை என தம்மீது குற்றஞ் சாட்டமுடியாது என ஜினதாஸ நியதபால எம். பி தம் உரையில் கூறினார். ஹெல உறுமய தலைவர் திலக் கருணாரட்ண தமது பிரியாவிடை உரயில் சுதந்திரக் கட்சியில் ஜனநாயகத்தை நிலைநாட்டி 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ற விதத்தில் அதை அமைக்க நாம் செய்த முயற்சி தோல்வி கண்டதாக கூறினார். தொடர்ந்து ஹலிம் இசாக் உரையாற்ற முற்படும் போது சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் ஸ்ரான்லிதிலகரட்ணவும், ரிச்சர்ட்பத்திரனவும் குறுக்கீடுகள் செய்தனர். இதை யடுத்து பாராளுமன்றம் 20 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

# குளங்கள், வாய்க்கால்கள் புனரமைக்கப்படுகின்றன

கிளிநொச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் உள்ள பழுதடைந்த குளங்கள்,வாய்க்கால்கள் என்பன தேசநிர்மாணிகளால் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் வெள்ளத்தால் சேதமடைந்த பல்லவராயன் கட்டு குளத்தின் ஒரு பகுதிக்கு மண் போடப்பட்டதுடன் குளக்கட்டும் வலுவூட்டப்பட்டுள்ளது. அவ்வாறே பாதிக்கப்பட்ட நாகபடுவான் குளம் மேலும் பாதிக்காதவாறு மீள் புனரமைப்பு செய்யப்பட்டது.

மேலுப்பண்டுவெட்டி குளக்கட்டின் சேதமான பகுதிகள் புனரமைக்கப்பட்டு பழைய நிலைக்கு கொண்டு வந்ததுடன் குளத்தின் அணைக்கட்டில் வாகனம் செல்லக் கூடியவாறும் திருத்தம் செய்யப்பட்டு உள்ளது.

இரணைமடுவிலிருந்து வயல்களுக்கு பாய்ச்சும் மீதிநீரை இடையில் தேக்கி குளக்கட்டு ஒன்று கிளிநொச்சியில் நையாறு ஏ. பி. திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்களில் பங்கு பற்றிய நூற்று முப்பத்தைந்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் நேரடி வேலை வாய்ப்புக்கள் பெற்றதுடன் இதனால் ஆயிரக் கணக்கான ஏக்கர் மேட்டு நிலத்திற்கு நீர் கிடைக்கக் கூடியதாயும் கால் நடைவளர்ப்பு நந்நீர் மீன்பிடி என்பன மேற் கொள்ளக் கூடியமையாகவும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது,

---

## கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு

கிராம மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்தும் நோக்கமாக அண்மையில் கரவெட்டியில் தெரிவு செய்யப்பட்ட 05 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புக்கென தலா 7825 ரூபா வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுவினரால் கிராமிய மேம்பாட்டுத்திட்ட நிதியினைப் பயன்படுத்தி மொத்தமாக இவர்களுக்கு 39,125 ரூபா வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்

# 4 ஐ. தே. க. உறுப்பினர் சந்திரிகாவிற்கு ஆதரவு


(கொழும்பு)

மேல் மாகாண சபையைச் சேர்ந்த நான்கு ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேல் மாகாண சபை அமைச்சராக இருந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர் அப்பதவியில் இருந்து நீக்கியதை தொடர்ந்து முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசிய கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் முயற்சி மேற்கொண்டன. அதன் போதே இவ்வுறுப்பினர்கள் இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பில் ஐ. தே. க. உறுப்பினர் தமது ஒத்துழைப்பு சந்திரிகா குமாரணதுங்காவுக்கு வழங்கப்படும் என உறுதி அளித்ததாக தெரிய வருகின்றது. இதனைத் தொடர்ந்து சந்திரிகா குமாரணதுங்கா மீது கொண்டுவர இருந்த ஒழுங்கு நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டதாக தெரிய வருகின்றது.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. செ. திருநாவுக்கரசு**

(சமாதான நீதிவான், முன்னைநாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராம சபைத்தலைவர்)

அன்னை மடியில் 15 . 07 . 1920

ஆண்டவனடியில் 12 . 07 . 1987

**திதி: 25 . 06 . 1994**

பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
நேசத்தைக் காட்டி எமை வளர்த்த ஐயா!
கண்ணை இமைகாப்பது போன்று
காலமெல்லாம் எமைக் காத்தீர்!
விண்ணைக் காப்பதற்கோ — எம்மை விட்டு
விரைவாக சென்று விட்டீர்!
அன்னியப்படைகளின் அட்டகாசத்தால் .. அன்று
உமது உயிர் பிரிந்தது .. இல்லை

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் இராணுவ கடற்படை கூட்டு முகாமிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் வியாழன் மாலை 7. 30 மணியளவில் பொன்னாலை பகுதியை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இதேவேளை மாதகல் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரும் சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி எறிகணைகளை வீசினர். இவ்விரு சம்பவங்களிலும் உயிர்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத்தெரியவருகிறது. (41)

## குடிசைகள் புனரமைப்பு

(தொல்புரம்)

சங்கானைப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள குடிசைகள் புனரமைக்கும் பணிகள் தொடர்கின்றன.

சித்தன்கேணிபோரூட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் மேற்படி புனரமைப்பு பணிகள் சங்கானை ஓடக்கரை குடியிருப்பு, தோப்புக் குடியிருப்பு, வைரவர் குடியிருப்பு ஆகிய முகாம்களின் குடிசைகள் திருத்தியமைக்கும் பணிகளே. நடைபெற்று வருகின்றன இந்தப்பணியினால்இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வாழும் பல வறிய மக்கள் பயனடைகின்றனர். (41)

## கருத்தரங்கு

(தொல்புரம்)

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினத்தையொட்டி சித்தன்கேணி போரூட் நிறுவன சக்திக்குழுவினால் கருத்தரங்கும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்படவுள்ளன.

## வரலாற்று நாடகம் முதலிடம்

யாழ். மாவட்ட ரீதியில் நடைபெற்ற, தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகளில் பிரிவு மூன்றுவரலாற்று நாடக போட்டியில், யா / காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. ஆண்டு 11 மாணவர்களால் நடிக்கப் பெற்ற ''தென்னவன் பிரம்மராயன்'' என்னும் நாடகமே மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குழு இரண்டு திருக்குறள் அறிவுப் போட்டியிலும் இப்பாடசாலையே மாவட்ட ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

## பளை கோட்ட தடகள போட்டி

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் முதலாவது தடகள விளையாட்டுப் போட்டி 27ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1. 00 மணிக்கு கிளி, வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு ப. அரியரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் முதன்மை விருந்தினராக தமிழீழக் கல்வி மேம்பாட்டு கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனும் சிறப்பு விருந்தினராக பளைப்பிரதேச செயலர் திரு இ. ஐயாத்துரை அவர்களும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட விசேட தளபதி திரு வ. செல்வராசா அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

## மெய்வல்லுநர் போட்டி

மானிப்பாய் கட்டுடை பாவீரர் ரகு பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் 29-ம்திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மேஜர் சுபாஸ் சனசமூக நிலையத் தலைவர் திரு. நா. கஜேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளின் போது பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் திரு. து. வைத்திலிலிங்கம் அவர்களும். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்ட மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி அன்பரசி உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் (41)

# எம் பிரச்சினையை தீர்க்கும் கட்சிக்கே இ. தொ. கா. ஆதரவு

(கொழும்பு)

ஜனாதிபதியாக யார் வருகிறார் என்பது பற்றி எமக்கு பிரச்சினையில்லை. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து நடைமுறை ரீதியில் எவர் தீர்வு காண முன் வருகின்றாரோஅவ்வாறானஒருவருக்கே எமது ஆதரவு நிச்சயமாக உண்டு என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

கண்டியில் நடந்த வைபவம் ஒன்றில் அவர் பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். ஜனாதிபதிக்கும் இ. தொ. காவுக்கும் இடையில் கடந்த காலத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருந்தது. இ. தொ. கா- ஐ. தே. க உறவை விரும்பாத, எம் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படக்கூடாது என்பதில் கவனம் செலுத்திய சில சக்திகள் வழங்கிய தவறான தகவல்கள் காரணமாகவே இந்த நிலையேற்பட்டது. ஆனால் தென் மாகாண சபை தேர்தலை அடுத்து ஜனாதிபதி உண்மையை உணர்ந்து கொண்டதுடன் எம்முடன் மீண்டும் உறவு கொண்டார் எனவும் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

## மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் அறிவோர் கூடலின் 3வது ஆண்டு விழா புலோலி கிழக்கு இல்லத்தில் வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு. மா. இரத்தினசோதி வரவேற்புரையை நிகழ்த்தினார். இலக்கிய அமைப்புக்களில் எனது அனுபவங்கள் பற்றிக் குப்பிளான் ஐ. சண்முகலிங்கம் உரை நிகழ்த்தினார். உடுக்கிசை, மிருதங்கஇசை, வீணை இசை, வயலின் இசை, புல்லாங்குழல் இசைகளையடுத்து நாட்டார் கூத்தன் வளர்பிறை மன்றத்தினரின் ''செட்டி வர்த்தகன்'' நாட்டுக் கூத்து இடம் பெற்றது. யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தொகுப்புரை நிகழ்த்தினார். யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரன் நன்றியுரை நிகழ்த்தினார். (25)

### விமான நிலையத்தில் வைத்தே

## வான் கடிதங்களை உடனடி தரம் பிரிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும் விமானக்கடிதங்களை விமான நிலையத்திலேயே வைத்து தரம் பிரித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கான புதிய ஒழுங்கு முறை ஒன்று கடைப்பிடிக்கப்பட உள்ளது என தெரியவருகிறது.

இதுவரை விமான கடித பொதிகளும் கொழும்பு மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டு அங்கு வைத்தே தரம் பிரித்து வரப்படுகின்றது.

A/L 96

தூய - பிரயோக கணிதம்

திரு. கிருஷ்ணா

ஆரம்பம்:

25-06-1994

பிற்பகல் 2மணி

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி-9374)

## வலுக்குறைந்தோருக்கான மறுவாழ்வு

வலுக்குறைந்தோர்மறுவாழ்வு இல்லம்

ஆதரவற்ற வலுக்குறைந்தவர்கள் சுயதொழில் பயிற்சி பெற்று மறுவாழ்வு பெற எம்மால் இல்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வில்லத்தில் தங்கியிருந்து மறுவாழ்வு பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நோயாளர் நலன்புரிச்சங்க செயலகம்
யாழ் அரசினர் பொது மருத்துவமனை.

(8642)

# பெயர் மாற்றம்

அன்னியப்படைகளின் அட்டகாசத்தால் .. அன்று
உமது உயிர் பிரிந்தது .. இல்லை
பிரித்திட்டார் உம்மை எம்மிடமிருந்து
இரக்கமில்லா இலங்கை அரக்கர்கள்.
ஏழு ஆண்டுகள் ஆயினும் — நாம்
மறவோம் உன் நாமத்தை — எம்
நினைவெல்லாம் நீங்கள் ஐயா! என்றும்
நீங்காது இடம் பெறுவீர்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும் உங்கள்

கரணவாய் வடக்கு, கரவெட்டி. (8631)


மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வினால் கருத்தரங்கும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்படவுள்ளன.

நாளை பிற்பகல் 1-00மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் சக்திக் குழுத் தலைவர் என். விஜயநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் டாக்டர் பேரின்பநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (41)

## கூடு விட்டு பறந்த குயில்கள்

1-ம் வருட நினைவஞ்சலி 6-ம் வருட நினைவஞ்சலி



அமரர்
மு. விஜயரட்ணம் (வீ.வீ)
சுபமாலா மோட்டோர்ஸ்



அமரர்
மு.சண்முகரட்ணம் (தயா)

27-08-1953 > கருவிலே < 03-06-1956
25-06-1993 > கவிதையில் < 19-05-1988
குமாரஷஷ்டி > திதி < சதுர்த்தி

சொந்தமென்ற பந்தத்தால் கட்டிப் போட்டீர்கள்
சிரித்துப் பழகியே எம் சிந்தையில் கலந்தீர்களே
உங்கள் நினைவுகளை நினைக்க இனிக்கும் இதயம்
பிரிவினிலே விண்ணென்றே வலிக்கின்றதே
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் ஆறாதே எம் நெஞ்சம்.

நியூ சுபமாலா மோட்டோர்ஸ்
79, அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவினால் துயருறும்
மருமக்கள்.

(8641)


# பெயர் மாற்றம்

| கொழும்பு ஸ்ருடியோ | கொழும்பு கலைக்கூடம் |
| --- | --- |
| 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். ஆரம்பம் : 1939 | 55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம். பெயர் மாற்றம் 1994 |

போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்
★ போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல் (சாம்பிள் பார்வையிடலாம்)
★ கொம்பியூட்டர் றபர்சீல் (Computer Rubber Stamps) (இரண்டு வருட உத்தரவாதம்)
★ லயின் காவ் ரோன் கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
★ புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## கொழும்பு கலைக்கூடம்

55, லெப். இளங்கோ வீதி,
யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-9873)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
...ர் ...நூலகம்.

சிந்தனைக்கு

எதிரிக்காக மூட்டும் நெருப்பு, சில சமயங்களில் உன்னையே அதிகம் சுட்டுவிடக்கூடும்.

-சீனப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2024
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 25-06-94
தபால் பெட்டி எண்- 05

## உதிரிகளும் டி. பியும்

பாராளுமன்றம் கலைப்பு தொடர்பான அறிவிப்புக்கள் வெளிவரத் தொடங்கியதில் இருந்து மூன்றாம் உலகின் ஜனநாயகத்தின் விசேட பண்புகளில் ஒன்றான கட்சித் தாவல்கள் தொடர்பான அறிவிப்புக்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதன் முதற்கட்டமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம் பிக்கள் ஆறுபேர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் இம்மாற்றமானது ஒரு அதிர்ச்சிக்குரியதோ ஆச்சரியமானதோ அல்ல. எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். தீவிர வலதுசாரிப் போக்குடைய இவர்கள் அநுரா பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய போதே இவர்களும் வெளியேறுவார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், அவர்கள் உடன் வெளியேறவில்லை. ஆனால், தற்பொழுது அவர்கள் வெளியேற வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. தற்பொழுதும் அவர்கள் வெளியேறாவிட்டால் அவர்கள் அரசியல் அஸ்தமித்துவிடலாம்.

ஏனெனில். தென் மாகாண சபைத் தேர்தலின் போதே இவர்கள் அனைவரும் கட்சியினால் புறந்தள்ளப்பட்டு இருந்தவர்கள். தற்பொழுது கட்சியை விட்டு வெளியேறியவர்களில் பெரும்பாலானோர் தென்மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும், இவர்கள் புறந்தள்ளப்பட்ட நிலையில் அம் மாகாண சபைத் தேர்தலில் கட்சி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்

ஒருவகையில் இவர்களின் வெளியேற்றம் தாமதமானது என்பதுமட்டுமல்ல, அநுரா பண்டாரநாயக்காவும், டி.பி. விஜேதுங்காவும் எதிர்பார்த்தது போல் சுதந்திரக் கட்சியில் பெரும் பிளவை ஏற்படுத்தவும் இல்லை. அவர்கள் ஐ.தே.கவில் இணையவும் இல்லை. இது ஒருவகையில் அநுராவிற்கும், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருந்திருக்கலாம்.

ஆனால், கட்சியில் இருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்து ஓரளவு நன்மை என்றே கொள்ளமுடியும். கட்சியினால் ஓரங்கட்டப்பட்ட நிலையில் இருந்த இவர்கள் ஐ.தே. கட்சியில் இணைவதன் மூலம், பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இடம் பிடித்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

# கண்டியர்க்கு தனியான தாயகம்

# பிரமுகர்கள் மட்டத்தில் ஆலோசனை

தேர்தல்களுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் அனைத்தும் தீவிரமாக இறங்கியுள்ள இவ்வேளையில் இழந்த பெருமையை மீளப்பெறும் நோக்குடனான கோரிக்கை ஒன்றை முன்வைப்பதற்கான ஆலோசனைகளை ''கண்டியர்கள்'' சிலர் தயாரித்து வருவதாக செய்தியொன்று வெளியாகியுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே குழப்பத்தில் உள்ள அரசாங்கத்தையும், எதிர்க்கட்சிகளையும் மேலும் குழப்பக்கூடிய ஒரு யோசனையாகவே இது தென்படுகின்றது. அத்துடன் இதன் பின்னணியில் இனவாதக் கண்ணோட்டமொன்றும் இழையோடியிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஆனால் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடைய தாயகக் கோட்பாட்டை நியாயப்படுத்தக் கூடிய சில அம்சங்கள் இக்கோரிக்கையில் காணப்படுவது தவிர்க்க முடியாததாகவே உள்ளது.

கண்டியர்களுடைய நலன்களை பேணுவதற்கும் மேம்படுத்துவதற்குமாக தனியான ஒரு பிராந்திய அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் கோருவதென மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த முயற்சியில் இன்றைய அரசியலமைப்பையே பாதிக்கக் கூடிய விதமான தன்மைகள் பலவும் காணப்படுகின்றன.

இக்கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதற்கான சமாதானம் எதனையும் அவர்களால் கூற முடியாத நிலை ஏற்படும். எனவே அரசாங்கத்திற்கு இது ஒரு சங்கடமான நிலையாகவே இருக்கும்.

இலங்கையை ஆரம்பத்தில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கைப்பற்றி ஆட்சி

வருவதாகவும் அறிய வருகிறது.

இந்த நடவடிக்கைக் குழுவில் முன்னாள் தூதுவர்கள், உயர் மட்டத்திலுள்ள தொழில்சார் வல்லுநர்கள், அரசியல் வாதிகள், நிர்வாகிகள் உட்பட பலர் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது. இது இந்த விடயங்களை மேலும் கனமுள்ள தாக்கியுள்ளது.

கண்டி ராஜதானியின் வம்சாவளியினர், சுதந்திரம் கிடைத்த பின்னரான இந்த ஐந்து தசாப்த காலத்தில் இந்நாட்டில் மிகவும் கவனிக்காமல் விடப்பட்ட ஒரு மக்கள் பிரிவினராக கண்டியர்கள் உள்ளார்கள் என இந்த நடவடிக்கைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஏனைய சமூகங்கள் ஒவ்வொரு விடயத்திலும் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றன. சுதந்திரத்தின் பின்னர் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கண்டிய மண்ணின் மைந்தர்களின் கோரிக்கைகளையிட்டு செவிசாய்க்கத் தவறியே வந்துள்ளார்கள் எனவும் இவர்கள் குறை கூறியுள்ளனர். முக்கியமாகக் காணி தொடர்பான விடயங்களில் அரசாங்கங்கள் தமது அபிலாசைகளையிட்டு கவனிக்காமல் இருந்துள்ளது என்பது இவர்களுடைய முக்கியமான மனக்குறையாகவுள்ளது.

கண்டிய ராஜதானி எவ்வாறு கைப்பற்றப்பட்டது என்பதையும், கண்டிய மக்களின் உரிமைகள் எவ்வாறு திட்டமிட்ட முறையில் நசுக்கப்பட்டன என்பதையும் விளக்கும் அறிக்கை ஒன்றினை இந்த நடவடிக்கைக்குழு தயாரித்துள்ளது.

பிரித்தானியருடைய ஆதிக்கத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற முறையில் கண்டியர்களது துன்பங்களுக்கும் பரிகாரம் காண்பதில் சுதந்திரத்தின்

இருந்துள்ளதென இவர்கள் நம்புகின்றனர். கண்டி ராஜ்யம் முழுமையாக ஒரே நிர்வாகப் பிரிவாக உள்ளது கண்டியர்களைப் பலப்படுத்திவிடும் எனவும் இது மற்றொரு புரட்சிக்கு வழிகோலலாம் எனவும் அஞ்சியதாலேயே இவ்வாறான நிர்வாகப் பிரிவுகளைப் பிரித்தானியர்கள் ஏற்படுத்தியதாக கண்டியர்கள் வாதிடுகின்றனர். அதாவது தம்மைப்பலவீனப்படுத்தலே இந்த பிரிவுபடுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பதே இவர்களது கருத்தாகவுள்ளது.

கண்டியராஜ்யத்தின் நிலப்பரப்பு பின்னர் மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம் வடமேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், ஊவா மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றுக்குள் உள்ளடக்கப்பட்டன எனவே கண்டிய மக்களுக்காக என ஒரு பிராந்திய அமைப்பை உருவாக்கும் போது எல்லை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள இந்த விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் எனவும் இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

'ஐக்கிய' இலங்கையில் கண்டிய மண்ணின் மைந்தர்கள் திருப்தியடையவில்லை என்பதே அவர்களுடைய இந்த கோரிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் தம் தனித்துவம் பேணப்பட வேண்டும் என்ற அவர்களுடைய நீண்டகால அவா புத்துயிர்ப்படைய முயற்சிக்கின்றதா என்றகேள்வியையும் இது எழுப்புகிறது.

பிரித்தானியர் இந்தத் தீவைக் கைப்பற்றிதனித்தனியாக இருந்த மூன்று அரசுகளை ஒன்றிணைத்து இலங்கை என்று ஒரு நாட்டை உருவாக்கினால் கூட ஒரு பிரிவினரின் ஆதிக்கமே இங்கு மேலோங்கியுள்ளதென்பதை கண்டியர்களின் இந்தக் கோரிக்கைகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதம்

கண்டியச் சிங்களவர்களுக்கும் கரையோரச் சிங்களவர்களுக்கும் இடையே காணப்பட்ட முரண்பாடுகள் தமிழ் மக்களுக்கு எதிராக பேரினவாதம் மேலோங்கிய போது சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது. அதாவது பேரினவாதமே இவர்களிடையேயான முரண்பாடுகளை மூடி மறைத்தது. எனினும் இது முற்றாக மறையவில்லை என்பதையே தற்போதைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

பெருந்தோட்டங்களில் உள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிரான இன அடிப்படையிலான பல அம்சங்களும் இவர்களின் கோரிக்கைகளில் காணப்படுகின்றன. எனினும் தமிழர் பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றைக்காண சில அடிப்படைகளையும் இக்கோரிக்கைகள் தந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே இவற்றை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது தமிழர்களின் கோரிக்கைகளையும் நியாயப்படுத்துவதாக இருக்கும் என்பதால் அரசு இவ் விடயத்தில் மிக அவதானமாகவே நடந்து கொள்ள முயலும்.

காணி ஒதுக்கீடு போன்ற விடயங்களில் மக்கள் உரிய முறையில் கவனிக்கப்படவில்லை என்ற மனக்குறையையும் இவர்கள் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். கிராமிய விஸ்தரிப்பு திட்டங்களில் கூட கண்டியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ள

தாக கூறும் இவர்கள் இ. தொ. காவின் நெருக்குதல்கள் காரணமாக சில கண்டிய குடும்பங்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தியப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில்பெருந்தோட்டங்களின் உரிமையை மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இதனைதாம் உடனடியாக அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இனவாத அடிப்படையிலான அரசியல் நோக்கங்கள் இந்த கோரிக்கைகளின் பின்னணியில் இழையோடிப் போயிருப்பது தெளிவாகின்றது. அமைச்சர் தொண்டமானின் தலைமையிலான இ. தொ. காவுடன் அரசின் உறவுகள் வலுவடையும் ஒரு நிலையில் இக் கோரிக்கைகள் அரசிற்கு சங்கடத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

முக்கியமாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும், அரசில் அண்மையில் இணைந்து கொண்ட காமினி திசாநாயக்காவும் கண்டியர்களாக உள்ளதால் தனிப்பட்ட முறையில் இவர்களுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்துவதும் இந்த முயற்சியின் பின்னணியிலுள்ள காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

நன்றி: வீரகேசரி

## தமிழக உல்லாசப்பயணி கொழும்பில் தாக்கப்பட்டார்

(சென்னை)

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு விஜயம்செய்த தமிழக உல்லாசப் பிரயாணி ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தரால் தாக்கப்பட்டதாக அங்குள்ள தேசிய புலனாய்வு பணியக அதிகாரி

மேற்படி சம்பவம் இடம்பெற்றதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான நிலையத்தில் கடமையில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் தமக்கு சம்பந்தமில்லாத விடயங்கள் தொடர்பாக தம்முடன் பேசியதையடுத்து எழுந்த வாக்கு

ள்ளனர்.

இதேசமயம் தமது தீவிர வலதுசாரிப் போக்கிற்குரிய தலைவரையும் அவர்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். சிங்கள அரசியற் தலைவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் பொதுவாகவே பௌத்த - சிங்களப் பேரின வாதத்திற்கே தலைமை தாங்கியவர்கள் ஆனால், ஒவ்வொருவரும் அதன் வீதாசாரத்தில் சிறு மாற்றம் கொண்டவர்கள்.

இதன் அடிப்படையில்தான் தற்பொழுது சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும், கட்சியில் செல்வாக்கு மிக்கவருமான சந்திரிகா குமாரணதுங்காவின் போக்கில் இவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். பௌத்த - சிங்கள பேரினவாதத்திற்கு ஏற்ற தலைவராக அவரைக் கருதவில்லை. சந்திரிகாவை இடதுசாரிகள் என்ற ரீதியில் இவர்கள் நோக்குகின்றனர். இது எந்தளவு ஏற்புடையது என்பது வேறு விடயம். ஆனால் இவர்களுக்கு இன்று தீவிர வலதுசாரித் தலைமை ஒன்று தேவையாக உள்ளது.

இதற்கேற்பவே தமது தீவிர வலது சாரித்தனமான போக்கிற்கு ஏற்ற தலைவராக டி. பி. விஜேதுங்காவை அவர்கள் தேடிக் கொண்டுள்ளார்கள். டி. பி. விஜேதுங்கா சிறிலங்காவின் ஜனாதிபதியாக இருப்பினும் அவர் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் தலைவராக இருக்க விரும்புகின்றார் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை. கடந்த கால நடவடிக்கைகள், பேச்சுக்கள் என்பன இதற்குப் பலமான ஆதாரங்களாக உள்ளன.

இதேசமயம் டி. பி. விஜேதுங்காவின் அரசியலானது உதிரிகளை அரவணைக்கும் அரசியலாகவே உள்ளது. தமது கட்சிக்குள் தமக்கென ஒரு பலமான அணியைக் கொண்டிருக்கவோ, அன்றி உருவாக்கவோ முடியாத டி. பி. விஜேதுங்கா ஏனைய கட்சிகளில் உள்ள உதிரிகளையும், ஐ. தே. கட்சியில் இருந்து முன்னர் உதிர்ந்தவர்களையுமே தனது அரசியல் அணியாகக் கொண்டு செயற்பட முற்படுவதாகத் தெரிகின்றது.

இதன் அடிப்படையிலேயே டி. பி. விஜேதுங்கா அநுரா பண்டாரநாயக்கா, காமினி திசாநாயக்கா, ரொனி டீ மெல் போன்றவர்கள் ஐ. தே. கவில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இதேசமயம் ஏனைய கட்சிகளில் இருந்து உதிர்பவர்களையும் இணைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் புதிய வருகையே இந்த ஆறு சுதந்திரக்கட்சி எம். பிக்களும் ஆகும்.

ஆனால், உதிரிகளாலும், உதிர்ந்தவர்களினாலும் பயன்பெற முயலும் டி. பி. விஜேதுங்காவின் முயற்சி எந்தளவிற்குப் பயன்பெறும் என்பதே கேள்வியாகும். ஏனெனில், சிறிலங்காவில் பிரதான கட்சிகளில் இருந்து உதிர்ந்தவர்கள் எவரும் தமது அரசியல் வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்ளவில்லை என்பதே அரசியல் வரலாறாக உள்ளது.

தரும் கைப்பற்றி ஆட்சி செய்த போதிலும், கண்டி ராஜ்யத்தை மட்டும் அவர்களால் கைப்பற்றமுடியவில்லை 1815ஆம் ஆண்டில் தான் ஆங்கிலேயர்களால் கண்டியைக் கைப்பற்ற முடிந்தது. சரித்திர அடிப்படையில் அப்போது இலங்கை மூன்று நிர்வாகப் பிரிவுகளாகஇருந்தது. யாழ்ப்பாணம், கோட்டை, கண்டி ஆகியனவே இம்மூன்றுமாகும்.

ஆனால் 1833 ஆம் ஆண்டில், தம்முடைய நிர்வாக வசதிக்காக இம் மூன்று பிரிவுகளையும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஒன்றிணைத்தார்கள். இதன் மூலமே இத் தீவு முழுவதற்கும் பொதுவான அரசாங்கமொன்று முதன் முதலாக உருவாக்கப்பட்டது. மூன்று ராஜதானிகளும் தம்முடைய தனித்துவத்தை இழப்பதற்கான முதலாவது அடியாகவும் இதுவே அமைந்தது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு கண்டியர்களின் நலன்களையும் தனித்துவத்தையும் பேணும் நோக்கத்துடனேயே புதிய கோரிக்கைகளை முன்வைப்பதையிட்டு கண்டியைச் சேர்ந்த சில முக்கிய பிரமுகர்கள் தீவிரஆலோசனைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

கண்டி கைப்பற்றப்படுவதற்கு முன்னர் அதாவது 1815ஆம் ஆண்டின் முன்னர் காணப்பட்ட கண்டி ராஜ்யத்தின் பகுதிகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு தனியான நிர்வாகப் பிரிவொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே இந்தக் கோரிக்கையாகும். இது தொடர்பாக ஆராய்ந்து பொருத்தமான யோசனைகளை முன்வைப்பதற்காக 'நடவடிக்கைக் குழு' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் கையளிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்த நடவடிக்கைக்குழு தயாரித்து

ளது துன்பங்களுக்கும் பரிகாரம் காண்பதில் சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முன்னுரிமை கொடுத்து அக்கறை செலுத்தியிருக்க வேண்டும் என குற்றஞ்சாட்டும் இவர்கள் இதனைச் செய்வதை நோக்கமாகக் கொண்டே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது எனவும் குறிப்பிடுகின்றனர்.

பிரித்தானிய ஆட்சியாளர்களாலும், அதன் பின்னர் சுதந்திரத்தின் பின்னர் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களாலும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்த கண்டிய மக்களின் நலன்கள், 1987 இல் நடைமுறைக்கு வந்த மாகாணசபை அமைப்பின் மூலம் மேலும் மோசமடைந்தது என இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன் அடிப்படையில் மாகாணசபைகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இதற்காகத் தாம் தனிநாடொன்றைக் கோரவில்லை என்பதையும் தெளிவுபடுத்தியுள்ள இக் குழுவினர் தம்முடைய விசேட பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் அவற்றைக் கவனிப்பதற்கு வேண்டிய அதிகாரங்களைக் கொண்ட பொருத்தமான ஒரு பிராந்திய அமைப்பையே தாம் கேட்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

தமது நிலப்பரப்பு கண்டிய ராஜ்யத்தின் சகல பகுதிகளையுமே உள்ளடக்கியதாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் இக் குழுவினர், பிரித்தானிய ஆட்சியாளர்கள் இதனை தமது சொந்த நிர்வாக நலன்களுக்காக பின்னர் தனித்தனியாகப் பிரித்துள்ளார்கள் என்பதையும் சுட்டிகாட்டியுள்ளனர்.

இவ்வாறு இந்த எல்லைகள் பிரிக்கப்பட்டதன்பின்னணியில் மற்றொரு சூழ்ச்சித்திட்டமும்

க்கு எதிரான பேரினவாதம் மேலோங்க முன்னர் கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்ற வேறுபாடுகளே இங்கு மேலோங்கி இருந்தது. இதன் அடிப்படையிலேயே 1928ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமஷ்டிக் கோரிக்கை முதன் முதலில் முன்வைக்கப்பட்டது.

கரையோரச் சிங்களவர்களின் மேலாதிக்கத்திலிருந்து தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இக்கோரிக்கை அப்போது முன்வைக்கப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா இக் கோரிக்கையை ஆதரித்து பல கூட்டங்களில் உரையாற்றியதுடன் பத்திரிகையிலும் பல கட்டுரைகளை எழுதியிருந்தார்.

இந்த வகையில் பல்லின நாடொன்றில் சமஷ்டியின் அவசியத்தை முதலில் கோடிட்டுக் காட்டியவர்களாக சிங்களத் தலைவர்களே உள்ளனர். ஆனால் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வாக இதே சமஷ்டித் திட்டத்தை ஏற்க முடியாதவர்களாக சிங்களவர்கள் இருப்பது வேறுகதை.

தாயகக் கோட்பாடு என்று எதுவுமே இல்லை எனக் கூறி தமிழர்களின் தாயகக் கோட்பாடு நிராகரிக்கப்படும் ஒரு சூழ்நிலையிலேயே கண்டியர்கள் தம்முடைய தாயகக் கோட்பாட்டை முன்வைத்துள்ளார்கள்.

இது மறைமுகமாக தமிழர்களின் தாயகக் கோட்பாட்டையும் ஆதரிக்கும் ஒரு விடயமாகவே உள்ளது. ஆனால் அவர்களால் இதனைத் தவிர்க்க முடியாமற்போனது அவர்களைப் பொறுத்தவரையில் துரதிஷ்டவசமானது.

பட்டதாக அங்குள்ள தேசிய புலனாய்வு பணியக அதிகாரியிடம் புகார் செய்துள்ளார்.

23 வயதான பிரஸ் தாப உல்லாசப் பிரயாணி இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு இந்தியா திரும்பிய போதே

யதையடுத்து எழுந்த வாக்குவாதத்தைத்தொடர்ந்தே தாம் தாக்குதலுக்கு உள்ளானதாக மேற்படி உல்லாசப் பயணி தமதுபுகாரில் கூறியுள்ளார்.

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

# இத்தாலிய அணியால் நோர்வே தோற்கடிப்பு

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் நோர்வே அணியை இத்தாலிய அணி 1 : 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது: மற்றுமோர் போட்டியில் தென்கொரியா - பொலிவியா அணிகளிடையிலான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இரு நாடுகளுமே கோல்கள் எதுவும் போடாத நிலையில் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# பிரெஞ் துருப்புகள் றுவாண்டா நுழைந்தது

(கிகாலி)

ஐ நாவின் அனுமதியைத் தொடர்ந்து பிரெஞ் துருப்புகள் றுவாண்டா நகரினுள் சென்றுள்ளன. அருகிலுள்ள சயர் நாட்டு எல்லையூடாக இத் துருப்புகள் அங்கு நுழைந்தன. சுமார் 2500 பிரெஞ் துருப்புகள் உலங்குவானூர்திகள், டாங்கிகள் சகிதம் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டுப் போரில் பொதுமக்கள் கொல்லப்படுவதை தடுக்கவே பிரெஞ் துருப்புகள் றுவாண்டா செல்வதாக பிரான்ஸ் கூறியபோதிலும் இப்படைகள் றுவாண்டா அரசபடைகளுக்கு ஆதரவளிக்க வந்த ஆக்கிரமிப்புபடைகள் என றுவாண்டா தேசபக்த முன்னணி கிளர்ச்சியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-6-25**
**சனி இரவு**

08. 01 - அறிவியற்கலசம்
08. 10 - தாயகப்பாடல்கள்
08.25 - நேயர் கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - ''பிறந்தது புதுயுகம்''

**1994-6-26**
**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச்செய்திகள்
07. 40 - கலத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி,

யாழ்ப்பாணம் நல்லூர் இளைநூலகம்.

# கப்பல் கட்டணத்தை நிறுத்துமாறு கூட்டுறவு சபை கோரிக்கை

## யாழ். அரச அதிபருக்கு கடிதம்

தமக்கு விநியோகிக்கப்படும் பொருள்களிற்கான கப்பற் கட்டணத்தை நிறுத்துமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை யாழ். அரசாங்க அதிபரை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

கொழும்பில் இருந்து கப்பலில் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படும் சீனிக்கு கப்பல் கட்டணமாக கிலோ விற்கு நான்கு ரூபா அறவிடப்படுவதால் 100 மெற்றிக் தொன் சீனியைத் தருவிக்கும்போது 40 லட்சம் ரூபா மேலதிகமாக செலவுசெய்ய வேண்டியுள்ளது இதனால் விற்பனை விலையிலும் ஒரு கிலோவிற்கு நான்கு ரூபா அதிகரிக்க வேண்டி ஏற்படும் என்றும் இது பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள யாழ்ப்பாண மக்களை மேலும் பாதிப்படையச் செய்யும் என்றும் இதனால் இக் கட்டணத்தை நீக்குமாறும் கோரி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை யாழ் அரச அதிபருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக கூட்டுறவுச் சபையின் அதிகாரி தெரிவித்தார். (88)

# கோபாலசாமி உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீடு தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தி மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தலைமையில் நேற்று சென்னையில் உண்ணாவிரதம் நடைபெற்றது. சென்னை குறளகம் கட்டிடத்திற்கு எதிரே நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் சுமார் முந்நூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாரம் வேண்டுமா?
# தரகன் பேசும் பேரம் வேண்டுமா?

# ஆங்கிலவகுப்பு

(வடமராட்சி)

இரண்டாம் வருட பயிலுநர் ஆசிரியர்களுக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை ஆங்கில வகுப்பு நடைபெறவுள்ளது. (யோ)

# 'சுதந்திரப் பறவைகள்' வெளிவருகின்றது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ, ஏடான சுதந்திரப் பறவைகள் ஆனிமாத இதழ் எதிர்வரும் திங்கட்கிழமை வெளிவருகிறது பெண்களுக்கு எதிரான வன்முறை வடிவங்கள் உலக மகளிர் அமைப்புகள் போர்க்குரல் எனும் தலைப்புச் செய்தியுடன் ''தலைவனின் அணைப்பில் பிஞ்சுகள்'' எனும் படமும் முன்பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. மேலும் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் பெண் கல்வியும் குழந்தை வளர்ப்பும், பெண்ணை மதிப்போம், வீரதீர விளையாட்டுக்கள் உலகில் இரு இளம் புயல்கள், பத்தினித் தெய்வங்களும் பரத்தையர்வீதிகளும தமிழீழச் சட்டங்கள் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க தோள்கொடுக்கின்றன, சுதந்திரத்தைத் தேடி சிறுகதை போன்ற அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

# மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டங்கள்

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் 6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு கைதடி வடக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டம் உடுப்பிட்டி வட்டத்தில் 6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக் ஈன வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு வல்வெட்டி கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்டம் வடக்கு கிழக்கு வட்டம், கடற்புலிகளின் பிரதேசங்களில் 5ஆம், 6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.00 மணிக்கு அராலி மாவீரர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# ஐ. தே. கவுடன் இணைந்தவர்கள் ஹெலஉறுமய குழுவினரே

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொள்பவர்களை வைத்துக் கொண்டே எதிர்கால ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என சுதந்திரக்கட்சிப் பிரதிப் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் 'ஹெல உறுமய'' என்ற இனவாதக்குழுவினரே ஐக்கிய தேசியக் கட்சிக்கு இப்போது படையெடுத்துச் செல்கின்றனர். இன்னும் சிலர் மிக விரைவில் வெளியேற இருக்கின்றனர். இனிமேல் தான் சுதந்திரக் கட்சி தனது உண்மையான செயற் திட்டத்தை வெளிப்படுத்தும் என கூறினார்.

இனவாதிகள் கட்சியை விட்டு விலகியதைத் தொடர்ந்து தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் கணிசமான அளவு ஆதரவு தமக்கு கிடைக்கப் பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உத்தியோகபூர்வ இல்லம், அலுவலகம் எனக்கு இல்லை

- காமினி பொன்சேகா

உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றைத் தரும்படி நான் 1989-ம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்தேன். எனினும், எனது கோரிக்கைக்கு செவி சாய்க்கப்படவில்லை. எனக்காக அலுவலகம், தொலைபேசி, உத்தியோகபூர்வ இல்லம் எதுவும் இல்லை. இவ்வாறு பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் மேலும் கூறும் போது, எனது மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளில் நான் தான் அதிக கவனம் செலுத்தவில்லை என்று எவராவது கேள்வி எழுப்பினால் அவர் ஒரு முட்டாளாகத் தான் இருக்க வேண்டும். எனது பேச்சுக்களை பிரசுரிக்கக் கூடாது என்று பத்திரிகைக்கு தடை கூட போடப்பட்டிருந்தது இந்தச் சபையில் உண்மையைப் பேசியதுடன், சுதந்திரமாக செயற்பட்டமைக்காக இந்த தடைகளை எல்லாம் நான் அனுபவிக்க நேரிட்டுள்ளது என்றார்.

# க. பொ. த.

நடைபெறும் பாடங்கள் ஒத்திவைக்கப்பட்டு ஏனைய பாடங்கள் முடிவடைந்ததும் அப் பாடங்களுக்கான பரீட்சை நடைபெறும் என்றும் இது தொடர்பான முழுமையான விளக்கம் பின்னர் தகுந்த நேரத்தில் அறிவிக்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 45,000 ரூபா லஞ்சம் பெற்ற இரு பொலிசார் கைது

ஹெரோயின் போதை வஸ்து விற்பனையாளர் ஒருவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்க 45,000ரூபா லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பொலிசார் இருவரும், அவர்களுக்கு உடந்தையாக இருந்த ஒரு ஆட்டோ சாரதியும் லஞ்ச விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். இரு பொலிசாரும் கொழும்பு வடக்கு பொலிஸ் நிலையம் ஒன்றில் வைத்தே கைது செய்யப்பட்டனர்.

அப்பொழுது ஒருவரிடமிருந்து 19,815 ரூபாவும், மற்றவரிடமிருந்து 860 ரூபாவும் மீட்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

வெல்லம்பிட்டியில் உள்ள நவலோகபுர என்னும் இடத்தில் வைத்து இரு பொலிசாரும் ஹெரொயின் விற்பனையாளரை கைது செய்ததாகவும் பின்னர் அவரை விடுதலை செய்ய 50,000 ரூபா லஞ்சம் கோரி 45,000 ரூபாவை பெற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

# பாதாள உலகத்தவரால் இருவர் சுட்டுக் கொலை

பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களால் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இரு பிரிவினருக்கு இடையிலான மோதல் காரணமாகவே இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் தத்தமது இல்லங்களில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

# சிறிலங்கா

அம் முன்னணி மேலும் கூறியுள்ளது-

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 300 பேர் இதுவரையில் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது-

# போலி சான்றிதழ் வழங்கும் அலுவலகம் முற்றுகை

கொழும்பு அளுத்கடையில் இயங்கிய போலி மினி பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கும் அலுவலகம் ஒன்றை பொலிசார் முற்றுகையிட்டுள்ளனர்.

மிகவும் இரகசியமான முறையில் மேற்படி போலியான சான்றிதழ்களை வழங்கி வந்த இரண்டு வீடுகள் நேற்று முன் தினம் அளுத்கடை பொலிசாரினால் முற்றுகை இடப்பட்டதாகவும் அங்கிருந்து பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# ரெலோ தேசத்துரோகி புலிகளால் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆயித்திய மலை ... சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவ்வாறு விடுதலைப் புலி...

# மரண அறிவித்தல்கள்



திருமதி
## அக்கினேஸ் வயிலட் பிரான்சிஸ்
(இளைப்பாறிய ஆசிரியை O. L. R)

திருமதி அக்கினேஸ் வயிலட் பிரான்சிஸ் அவர்கள் 21-06-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற யாழ். மரண விசாரணை அதிகாரியும், சட்டத்தரணியுமான பிரான்சிஸ் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சாமினி அலோசியஸ், DR. சுரேஸ் ஆஞ்சலோ (LONDON), நரேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. அலோசியஸ் அவர்களின் மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 23-06-94 அன்று மதுரையில் நடைபெற்றது.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். மரியன்னை ஆலயத்தில் 27-06-94 காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

...ார்
இரு பிரிவினருக்கு இடை ...லான மோதல் காரணமாக ... இக்கொலைகள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## ஏடன் நகர் மீது வட யேமன் கடும் தாக்கு

ஏடன் நகர் மீது வடயேமன் ...டைகள் நேற்று கடுமையான ...ண்டு வீச்சுத் தாக்குதல் ...ளை நடத்தியுள்ளன. இதுவரை நடத்தப்பட்ட தாக்கு...ல்களில் இதுவே மிக மோசமானது எனக் கூறப்படுகிறது. இருபதுக்கும் அதிகமான குண்டுகள் வீசப்பட்டதாக பொது மக்கள் கூறியுள்ளனர். இதே வேளை தென் யேமன் படைகள் வட யேமன் படைகளைத் தாக்கி புற முதுகிட வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நுவரெலிய உதவி மேயரை வெட்டிக்கொல்ல முயற்சி

### ஆதரவாளர் இருவர் படுகாயம்

நுவரெலியா மாநகரசபை மேயர் திலகாஹேரத். உதவி மேயர் கே. விவேகானநதன் ஆகியோருக்கிடையேயான மோதல் உச்சகட்டத்தை அடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 16 ஆம் திகதி உதவி மேயர் விவேகானந்தனை கொலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இம்முயற்சியில் அவர் உயிர்தப்பியுள்ளார். இச்சம்பவத்தில் இவரது ஆதரவாளர்கள் இருவர் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களை வெட்டிய நபர் மாநகரசபைக்குள்ளேயே ஓடி ஒழிந்துகொண்டார்.

இதனைக் கேள்வியுற்ற மக்கள் உதவி மேயரின் ஆதரவாளர்களை வெட்டிய நபர் மாநகரசபைக்குள் ஒழிந்திருப்பதை கண்டுபிடித்து கோஷம் எழுப்பினர். நீண்டநேரமாக நடைபெற்ற இப் போராட்டத்தைத் தொடர்ந்து நுவரெலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவ்விடத்திற்கு வந்து வாளால் வெட்டிய நபரையும் அவருக்கு உதவியாக இருந்த நபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இவ் இருவரும் கடந்த 17 ஆம் திகதி நுவரெலிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவ் இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட உதவி மேயர் விவேகானந்தன் இச்சம்பவம் தொடர்பாக இ. தொ. கா. விற்கும் தொண்டமானுக்கும் தந்தி அனுப்பியுள்ளதாகவும் இது தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டுமென கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

... எனக் கூறப்படுகிறது-

**காமினி**

ர''சிங்கா ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்ளமுற்பட்டதாகவும் ஆனால் இவர் ஜனதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியை சந்திக்கவில்லை எனவும் தெரிய வருகின்றது.

**ராக்கிங்**

மாணவர்களுக்கான குறைந்த பட்ச தண்டனையாக அவர் சுமார் ஒருவருடம் பல்கலைக் கழகத்தில் இருந்து இடைநிறுத்திவைக்கப்படுவார் என்றும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்- (க)

## போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவையினரால் நடாத்தப்படும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டமும், ஆண்களுக்கான மரதன் ஓட்டமும் நாளை ஞாயிறு காலை 6 மணிக்கு நிகழ்வுள்ளதாக யாழ். பல்கலைக் கழக உடற்கல்விப் பணிப்பாளர் சி. தியாகராஜா தெரிவித்துள்ளார். (05)

**யாழ். ஸ்ரீதரில்**
**STEVEN SPIELBERG**
இயக்கிய
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
**தினசரி 4, 6**
**சனி, ஞாயிறு 10.30, 4.6 மணி**
(சி-9872)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆயித்திய மலை பிரதான வீதியில் வைத்து கடந்த 22ஆம் திகதி இரவு ரெலோ தேசத்துரோகி ஒருவர் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவ்வாறு விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர் மகிழ வெட்டுவானைச் சேர்ந்த புஸ்பானந்தம் என தெரியவந்துள்ளது.

## ஆய்ந்தறிதல் மூலமான கணிதபாட செயலமர்வு

யாழ்ப்பாணம் நல்லூர் வேலணை ஊர்காவற்றுறை கோட்டங்களுக்குட்பட்ட க பொ. த. சாதாரண தரத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான ஆய்ந்தறிதல் மூலமான கற்பித்தல் செயலமர்வின் மூன்றாம் கட்ட நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கள் தொடக்கம் பின்வரும் நிலையங்களில் ஆரம்பமாகின்றன.

27 ஆம்திகதி திங்கள் பெரியபுலம் ம வி, புனித மரியாள் வித். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றிலும்,

28 ஆம் திகதி செவ்வாய் நாயன்மார்கட்டு ம. வி, கொ. துறை இந்து ம. வி, வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும்,

29 ஆம் திகதி புதன் கணித விஞ்ஞான நிலையம் திருநெல்வேலி, புனித சாள்ஸ் ம. வி, வேலணை சேர் வை. து. ம. ம. வி. ஆகியவற்றிலும்

30 ஆம் திகதி வியாழன் கணித விஞ்ஞான நிலையம் திருநெல்வேலி. கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், புங்குடுதீவு கணேச வித்தியாலயம் ஆகியவற்றிலும் நடைபெறும்.

இந்நிலையங்களுடன் சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வருகை தந்து செயலமர்வில் பங்குபற்றி பயன் பெறுமாறு யாழ். வலயம் 1 கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் செயலாளர்கேட்டுக்கொள்கிறார்.

## தேசியநல்லிணக்க முயற்சி; தொண்டா - அநுரா சந்திப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்கள் நாட்டில் எதிர்நோக்கும்பிரச்சினை தொடர்பாக அண்மையில் உருவாக்கப்பட்ட தேசிய நல்லிணக்க அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காசௌ.தொண்டமானுடன் விரிவானபேச்சுக்களை நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் புதிய அமைச்சு பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர்தேசிய நல்லிணக்கமுயற்சிக்கானமுதல்சந்திப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான சௌ. தொண்டமானுடன் மிகவும் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் நடைபெற்றதாகவும் 45 நிமிடத்திற்கு இச்சந்திப்பு தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொண்டமான் பொதுவாக தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தெரிவித்துள்ளார் என்றும் மலையக மக்களின் பிரச்சினை தொடர்பாகவே விரிவான நிலையில் ஆராயப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை அனுரா பண்டாரநாயகா மிகவிரைவில் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக தெரிவித்துள்ளார்.

... காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

197/1, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். R.K. ஸ்தாபனத்தார் (8654)



## மகாலிங்கம் மணிவண்ணன்

**(யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன்):**

**மலர்வு: 14.05.1966** **உதிர்வு: 21.06.1994**

நாவற்குழியைச் சேர்ந்த மகாலிங்கம் மணிவண்ணன் 21-06-94 அன்று கனடாவில் அகால மரணம் அடைந்தார். அன்னார் மகாலிங்கம்-தவமணி தம்பதியினரின் மூத்த மகனும் உதயணன், மன்மதன். விநோதன், சுகிர்தா என்போரின் அன்புச் சகோதரனும், தம்பியையா-தங்கம்மா தம்பதியினரின் மூத்த பேரனும், செல்வராசா, புஷ்பராணி தம்பதியினரின் பெறாமகனும், கனகராசா குணபாக்கியம், இராசரத்தினம்-சற்குணலீலாவதி, தியாகராசா-மங்கையர்க்கரசி தம்பதினரின் அன்பு மருமகனுமாவார். ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்று முடிந்தன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

த. தியாகராசா
(மாமன்)

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி
(8643)